உ
சிவமயம்

Registered as a Newspaper in Ceylon
P. M. G. NO. H. A 59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் திகதி ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருசு] யாழ்ப்பாணம்:—தாரணஹூ ஆனி மீ சகூவ (1944 ஜூன் மீ 29 வியாழக்கிழமை) [இல உச

## அரசாங்கசபை கலைக்கப்பட வேண்டும்

### சிங்கள மஹாசபைத் தலைவர்களின் அபிப்பிராயம்

#### இலவசக்கல்வியை மந்திரி வற்புறுத்துகிறார்

அனுராதபுரம் ஜூன் 25—சிங்கள மஹாசபாவின் நேற்றைய கூட்டத்திற் பேசிய பலர் இப்போதைய அரசாங்கசபையின் பிரயோசனமான வாழ்நாள் முடிந்துவிட்டதென்று அபிப்பிராயந் தெரிவித்தனர்.

கண்டியைச் சேர்ந்த வழக்கறிஞரான திரு. பி. பி. ரணராஜா பேசுகையில அரசாங்கசபை மேலும் உழுத்துப்போகுமுன், அது கலைக்கப்பட வேண்டுமென்று கூறினர். நாட்டின உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காகப் பொதுஜனப் பாதுகாப்புக் 'கொமிஷன'ரும் விவசாய மந்திரியும் எடுத்துவரும் முயற்சிகளை அவர் வெகுவாகப் பாராட்டினர்.

இப்போதையசபை கலைக்கப்படுமானல், இப்போதிருக்கும் அங்கத்தவர்களைவிடச் சிறந்த அங்கத்தவர்கள் அரசாங்கசபைக்குத் தெரிந்தெடுக்கப்படலாமென்று கம்பளையைச் சேர்ந்த திரு. எம். ஸி. பெரேரா கூறினர்.

ஆயுளை நீடிப்பதில் ஆபத்தில்லை

அரசாங்கசபை அங்கத்தவரும் மஹா சபையின் காரியதரிசிகளுள் ஒருவருமான திரு. ஏ. பி. ஜயசூரியா பேசுகையில் தங்களுக்கிருக்கும் ஆசையினுல தாங்கள் இப்போதைய சபையில இருந்துவரவில்லையென்றும் இப்போதிருக்கும் நிலைமையில பொதுத்தேர்தல் அவசியமில்லையென்பதும் புதிய அரசியல திட்டம் தயாரிப்பவர்களின அபிப்பிராயமென்றும் வேறொரு பொதுத் தேர்தல் நடைபெறுமாயின இன்னும 5 வருடங்களுக்கு எவ்வித அரசியற் சீர்திருத்தமும கிடையாதென்பதில் எமக்குச சந்தேகமில்லையென்றும் கூறினர்.

கல்வி மந்திரி திரு. ஸி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா பேசுகையில அரசியற் சீர்திருத்தம் சம்பந்தமாக லண்டனிலிருந்து கிடைத்த தகவலகளைக் கொண்டு பார்க்கையில இப்போதைய சபையின் ஆயுளை மேலும நீடிக்கச் செய்வதில வருந்தத்தக்கதொன்றுமில்லையென்று தமக்கு விளங்குவதாகவும் அரசியற் சீர்திருத்த திட்டத்துக்குக் கிடைத்திருக்கும பதில பாம ஆரகசியமானபடியால் அதுபற்றி மேற் கொண்டு தமமால் யாதொன்றும கூறமுடியாதிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இலவசக்கல்வியை எதிர்ப்போர்

இலவசக கல்வியை எதிர்த்து அதிகாரிகளுக்கு இரகசிய விஞ்ஞாபன மொன்றனுப்பியவர்களின பெயர்களைத் திரு. கன்னங்கரா வெளியிட்டார். இவர்களிற பெரும பாலோர் அரசாங்கத்திடமிருந்து கௌரவப்பட்டங்கள் பெற்றவர்களென்றும் ஏழைமக்களை எப்போதுமே அவர்கள் தங்களுக்குக்கீழ் அடிமைகளாக வைத்திருக்க விரும்புகிறார்களென்றும் மிஸ்றர் கன்னங்கரா குறிப்பிட்டார்.

இந்தமுதலாளிகளின் பிடியிலிருந்து ஏழைமக்களை விடுவிக்கத் தாம் தீர்மானித்துவிட்டதாகவும் இதற்காக இலங்கையின மூலை முடுக்குகளிலெல்லாம் இலவசக்கல்வியைப் புகுத்தத் தாம் உறுதிபூண்டிருப்பதாகவும் அவர் கூறினர்.

தொடர்ந்தவர் பேசுகையில் தம்மை எதிர்ப்பவர்கள் தாமே இலங்கையின் செலவத்தை வற்றவைக்க முயலுவதாகக் கூறுகின்றனரென்றும் புதிய கல்வித் திட்டத்தை மதப்பாடசாலை நடத்துபவர்களும எதிர்க்கின்றனரென்று குறிப்பிட்டார்.

தீர்மானங்கள்

அடுத்த பொதுத் தேர்தல புதிய அரசியல் திட்டத்தின்கீழ் நடைபெறவேண்டுமென்று கோரி ஒரு தீர்மானம மகாநாட்டில் நிறைவேறியது.

தேர்தல் நிறப்பெட்டிகள் வைக்கும் முறையை எடுத்து விட்டு அதற்குப் பதிலாக வாக்குச்சீட்டில் அடையாளம் போடும் முறையை அமுலில நடத்தவேண்டுமென்று கோரித்தீர்மானம் நிறைவேறியது.

இலங்கையரலலாதாரைப் பதிவு செய்தல குடியேற்றத்தைக் கட்டுப்படுத்தல் ஆகியவை சம்பந்தமாக அரசாங்கசபையிற கொண்டுவரப்பட்டு இப்போது 'வ' சிறந்தாக் கமிட்டியின முன்னிருக்கும இரு மசோதாக்களமீது உடனே நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று கோரி இன்னொரு தீர்மானம் நிறைவேறியது.

உணவு உற்பத்திக்குக் கட்டாயமாக [illegible] எதிர்[illegible] நிறைவேறியது.

## "ஆளில்லா விமானம் மூளையில்லா விமானம்"

### லோவின் பரிகாசம்

லண்டன், யூன், 22

றேடியோ மூலம் செலுத்தக்கூடிய "குவென்னிபெக" விமானத்தை முதன்முதலாகக்கண்டுபிடித்த பிரிட்டிஷ் நிபுணர் புரொபஸர் ஏ. எம். லோ ஜெர்மனியின் ஆளில்லா விமானத்தைப் பரிகசிக்கிறார்.

ஆளில்லா விமானமானது மூளையிலலா விமானமாகத்தான் இருக்க முடியும். அது பாதுகாப்பு அற்றதாகவே இருக்கும். சமயோசிதமாக அது திசைமாறவோ தப்பிக்கவோ முடியாது. இந்த ஆளிலலா விமானஙகள்மூலம் ஏற்படும் நஷ்டம் டோர்பிடோ குண்டுகளைப் போன்றதாகும இரண்டுக்கும பலனில வித்தியாசமே இல்லை. ஆகையால் மக்களுக்குத் தொந்தரவுசெய்யக்கூடிய இந்த நாஜி ஆளில்லாவிமானத் தாக்குதலால யுத்தத்தின போக்கு மாறப் போவதில்லை.

## தனுஷ்கோடி அட்டகாசம் குறைகிறதாம்

### பொதுஜனங்களின் கிளர்ச்சியின் பயன் என்கிறார் மிஸ்றர் டி. சொய்ஸா

#### கூட்டுறவு இயக்கத்துக்கு இந்திய அரசாங்கத்தின் ஆதரவு

27உ

"இந்தியத் துறைமுக அதிகாரிகள் தனுஷ்கோடியில பிரயாணிகளை நடத்தும் விதத்தில் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது" என்று நேற்று முன்தினம் இந்தியாவிலிருந்து திரும்பிவந்த கூட்டுறவுச் சங்கங்களின் பதிவு காரியஸ்தர் மிஸ்றர். ஜீ. டி. சொய்ஸா ஒரு பத்திரிகை நிருபரிடம் கூறினர். பத்திரிகைகளும் பொதுஜனங்களும் செய்த கிளர்ச்சி ஓரளவு பலனளித்திருக்கிறது. அவர் மேலும் கூறுவதாவது:-

"இலங்கை வரும் பிரயாணிகள் தங்களுடைய உபயோகத்துக்கு வாங்கியிருக்கிறார்கள் என்று துறைமுக அதிகாரிகள் கருதும் பொருட்களை இலங்கைக்குக் கொண்டுவர இப்போது அதிகாரிகள் அனுமதிக்கிறார்கள். பிரயாணிகளோடு நடந்துகொள்ளுமமுறையிலும் இந்த அதிகாரிகள அதிக அக்கறையோடுதானிருக்கிறார்கள். குறிப்பாகப் பெண்கள விஷயத்தில் அவர்கள் மிக மரியாதையோடு இப்போது நடந்துகொள்ளுகிறார்கள்.

இந்தியாவிற் கூட்டுறவு இயக்கம்

இந்தியாவிற் கூட்டுறவு இயக்கம் எவ்வாறு நடைபெறுகிறதென்பதைப் பற்றி மிஸ்றர் டீ. சொய்ஸா குறிப்பிடுகையில் கூட்டுறவு இயக்கத்தைச் சென்னை அரசாங்கம மிகத் தீவிரமாக ஆதரித்து வருவதாகக் கூறினர்.

சென்னை மாநகரத்தில் திருவெல்லிக்கேணி கூட்டுறவு 'ஸ்டோர்' உணவு விநியோகம் சம்பந்தமான விஷயங்களில் அரசாங்கத்தின ஏஜெண்டாக நியமிக்கப்பட்டிருக்கிறது. சென்னை மாகாணத்தில இப்போது 1000 கூட்டுறவுக் கடைகள நடத்து வருகின்றன. இன்னும் பல கூட்டுறவு 'ஸ்டோர்'கள திறக்கப்பட்டு வருகின்றன.

சென்னை மாகாணத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கம் அளித்துவரும அமோகமான ஆதரவுதான இந்தக் கூட்டுறவு இயக்க முறைகளிற குறிப்பிடத்தக்கதென்றும கூட்டுறவு வங்கிகள கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளித்த கடனுக்குச் சென்ற ஆண்டு அரசாங்கம உத்தரவாதமளித்ததென்றும அவர் குறிப்பிட்டார்.

தனிப்பட்ட வர்த்தகர்கள்

தங்களாற கட்டுப்படுத்தப்பட்டிருக்குமசாமான்களைப் பொறுத்தவரை அரசாங்கக கூட்டுறவுச சங்கங்களை முதலிற கவனித்துத்தான் 'சப்ளை'களைக கொடுக்கிறார்களென்றும தனிப்பட்டவர்த்தகர்கள இதற்கு [illegible]கப்பட்டாலும இந்திய அரசாங்கம பொருட்படுத்துவதில்லையென்றும் அவர் கூறினர்.

## காந்திஜீக்கு இன்னும் பூரண சுகமில்லை

### வார்தா செல்ல மகாத்மாவின் ஆவல்

பூனா யூன் 25—

டாக்டர் கில்டர் இன்று காந்திஜியைப் பரிசீலனை செய்தார். டாக்டர் கில்டரும் சுசீலா நாயரும் கையொப்பமிட்ட அறிக்கை இன்று கூறுவதாவது:-

பூனாவில் காந்திஜி அதிக ஓய்வு பெற்றுவருவதுடன் பெருவாகச் சுகம்பெற்று வருகிறார். காந்திஜி பூரண சுகம் பெற்றுவிட்டாரென்று பத்திரிகைகளில் வெளிவந்திருக்கும் செய்தியொன்றை நாங்கள் கண்டோம். இச்செய்தியை நாங்கள் மறுக்கவேண்டியிருக்கிறதுபற்றி வருத்தமடைகிறோம். அவர் இன்னும் பூரண சுகம் பெறவில்லை. இரத்தக்கொதிப்பு ஒரு நிலையாக இல்லை எனிமியா அவருக்கு இன்னும் இருக்கிறது. அடுத்தவாரம் அவரைப் பாஞ்சகனிக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

பூனாவிற்கு வந்தபிறகு காந்திஜியின தேககிலையில் மிகவும அபிவிருத்தி ஏற்பட்டு வருகின்றதென்றாலும் அவர் வழக்கமான அலுவல்களைக் கவனிக்க இன்னும் பலவாரங்கள பிடிக்குமென்று கருதப்படுகிறது. வார்தாவிற்கு அவர் திரும்ப விரும்புகிறார். பாஞ்சகானியில் மூன்று வாரங்கள் இருந்தபிறகு காந்திஜி வார்தா செல்வார். அவருக்கு வருங்கடிதங்களின் தொகை அதிகரித்து வருகிறது. இன்னும் சிறிது காலத்தற்குக் காந்திஜி ராஜீயவிஷயமாக அபிப்பிராயமெதுவும கூறமுடியாதென்று கூறப்படுகின்றது.

## இந்திய நெருக்கடி ரூஸ்வெல்ட் சிரத்தை

### காரியதரிசி மகாத்மாவைக் காண்பார்

லண்டன் ஜூன் 19—

இந்திய நெருக்கடியைத் தீர்ப்பதில அமெரிக்க ஜனதிபதி ரூஸ்வெல்ட் சிரத்தை காட்டத் தீர்மானித்திருப்பதாகத தெரிகிறது.

அமெரிக்கப் பிரமுகர்களும் பத்திரிகைகளும வற்புறுத்துவதற்கு இணங்க மிஸ்றர் ரூஸ்வெல்ட் இவ்வாறு தீர்மானித்ததாகவும் உதவி ஜனதிபதி வாலஸ் ஆசியா நாடுகளுக்குச் சுதந்திரம் அளிக்கவேண்டும என்று வெளியிட்ட கட்டுரையும் ஜனதிபதியின மனத்தை இப்பக்கம திருப்பிற்று என்று கூறப்படுகிறது.

ஜனதிபதியின் காரியதரிசி மிஸ்றர். வாண்டோ பெர்ரி மகாத்மாவைப் பேட்டிகண்டு இந்திய நெருக்கடியை எப்படித் தீர்ப்பது என்பதைக காந்திஜியிடமிருந்து அறிந்து கொள்வர்.

இப்போதைய நெருக்கடியில் உணவு விநியோகப்பதற்குச் சிறந்த வழி கூட்டுறவுச் சங்கங்கள்தான என்பதைச் சென்னை அரசாங்கம் சந்தேகமறத் தெரிந்திருக்கிறதாகவும் அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரண௵
ஆனி௴ ௧௫உ வியாழக்கிழமை

## வெற்றியின் ஆரம்பம் போலும்

யுத்த விஷயமாகச் சில நாட்களாக வரும் தந்திச் செய்திகள் இங்குள்ள மக்களின் மனசிற்கு ஆறுதலையும் ஊக்கத்தையும் ஒருவாறு தரலாயின; ஐக்கியராச்சியத்தினரின் படைகள் யுத்தமுனையில் இப்பொழுது அநுகூலமடைந்து வரலாயின; நோர்மண்டி யுத்தமுனையில் அமெரிக்கபடை முந்தி ஜர்மனியராற் பிடிக்கப்பட்டு அவர்களாதிக்கத்திலுள்ளபிரதான தானமாகியசேர்பேர்க்விற்புகுந்துவிட்டன; சேர்பேர்க்விற் பெரும்பாகம் அமெரிக்க படையின் கைக்குள்ளாக, எஞ்சிய பாகத்தையும் கைப்பற்றுவதற்கு அமெரிக்கபடை ஜர்மனியருடன் எதிர்த்துக் கடுஞ்சமர் புரிகின்றதாம். ரிலவியென்னுந்தானத்தில இப்பொழுது கோரமான யுத்தம் நடக்கின்றதாம். சேர்பேர்க் பகைவர்களுக்கு வாய்ப்பான கடலரணாகும். இது ஐக்கிய ராச்சியத்தினர் கையிற் படும்போது பகைவர் தங்கள் பிரதான அரணுள் ஒன்றை இழந்தவர்களாவர்.

ருஷிய சைநியம் வெள்ளை ருஷியாவிலுள்ள வயிற்பிஸ்க் என்னும் தானம்வரையில் முற்பட்டுச் சென்று ஜர்மனியருடன் பொருது அந்தத் தானத்துட் புகுந்து விட்டது. இத்தலிய யுத்தமுனையில ஐக்கிய சைநியத்தின் எட்டாம் பிரிவுப் படை சியூசியென்னுந் தானத்துட் புகுந்துவிட்டது. அசாம பகுதியிலும் இம்பால இப்பொழுது பிருத்தானிய இந்திய சைநியத்தால் மீட்டுப் பிடிக்கப் படலாயிற்று.

இவைகளையெல்லாம் நோக்குமிடத்து ஐக்கிய தத்துவ ராச்சியத்தினருக்கு இப்பொழுதான் அநுகூலம் ஆரம்பித்திருக்கின்றதென்று நாம் யூகிக்கக் கிடக்கின்றது. ஐரோப்பாக் கண்டத்தில், ஐக்கிய ராச்சியத்தினர் படையெடுத்துச் செல்லத் தொடங்கி இற்றைவரையில மூன்று வாரங்கட்கு மேற்படலாயின; இந்தச் சொற்பகாலத்தில், ஐக்கிய ராச்சியத்தினர் பெற்ற அநுகூலம் அதிகமென்பது பாராட்டத்தக்கது. இவை இங்ஙனமாக, மனசஞ்சலத்தைத் தரத்தக்க சமாசாரமொன்று இலண்டனிற் பிறந்துள்ளதென அறிகின்றோம்; யுத்தத்திற் சம்பந்தப்படாது பொதுவை வகித்திருக்கும் சில ஆராய்ச்சியாளரும் வேறு சில பத்திரிகையாளரும் இப்பொழுது வெற்றி பெற்றுவரும் ஐக்கியப் படையில் நூற்றுக்கு எழுபது விகிதமானோர் அமெரிக்க போர்வீரரென்றும், அவர்களே வெற்றிக்கு மூலகாரணரென்றும் கதைபரப்பத் தொடங்கியிருக்கின்றனராம்; அயிரோப்பாக் கண்டத்திற் படையெடுத்துப் புகுந்தபோது முதன்முதல் அநுகூலமடைந்தவர் அமெரிக்கரேனும் அங்கு நின்று சமர் செய்யும் அமெரிக்க படையும் பிருத்தானிய படையும் கனடிய படையும் ஒரே தலைமையில் நிர்வகித்து நின்றே கருமமாற்றுகின்றன. இப்படையெடுப்பினாலே முதன் முதல் தாக்கிச் சென்றவர்கள் பிருத்தானிய போர் வீரரேயென்றும் முதல் வாரத்தில் அவர்கள் செயல் அநுகூலமாயிற்றென்றும் சேனாதிபதி எல்லிமேனர் என்பவர் அந்தநேரத்திலே தெரிவித்துள்ளார். பிருத்தானிய படையை எவ்வாற்றாலும் அலட்சியஞ்செய்ய முடியாது.

ஐரோப்பிய தத்துவ ராச்சியத்தினருக்கிடையே உண்டாகும் சமயோசிதமான ஐக்கியம் பரஸ்பரம்கொண்ட அன்பு காரணமாக எழுந்ததென்று சொல்லவேண்டியதில்லை, இவ்வாறு நோக்கமற்ற பெரும் தந்தேன்று சொல்வதே பொருத்தமுடைத்தாகும். ஆனால் இப்படியான வீண் கதைகளினால இந்த ஐக்கிய அரசினருக்கிடையில் யாதும் பிணக்கு நேருமோவென சிலர் அஞ்சுதலும் கூடும். ஆயினும், மிஸ்ரர். சேர்ஜில், பிரசாதிபதி ரூஸ்வெல்ற் என்னும் சிறந்த அரசியல் நிபுணர்கள் சமயம் தப்பட்டிருக்கும்போது யுத்தம் நிறைவேறும்வரை எவ்வகையான பிழையும் வாராதென்பதே நம்பிக்கை. "ஆர்த்ததற்றும் அரிசி பாற்ற போதும்" என்ற மொழிக்கிய ஆபோது சிறந்ததாகும்.

## ஆளில்லா விமானம் ஹோட்டலில் இறங்கிற்று

லண்டன் ஜூன் 20—

தென் இங்கிலாந்தில ஓரிடத்தில் ஜெர்மனியின் ஆளில்லாத விமானம் ஹோட்டல் ஒன்றின்மீது இறங்கிற்று. அந்த ஹோட்டலில் சாப்பிட்டுக்கொண்டிருந்த பல இந்தியர்கள் மாண்டனராம்.


## விவாகம்.

முத்துக்குமாரசாமி--அருளாம்பிகை

நல்லூர் செட்டித்தெருவைச் சேர்ந்த திரு. சி. சிவகுருவின் புதல்வராகிய திருவளர் செல்வன். முத்துக்குமாரசாமிக்கும் (Marketing Dept., Colombo). கொழும்புத்துறை செட்டித்தெருவைச் சேர்ந்த திரு. இ. சபா. நடேசரின் புதல்வி திருவளர் செல்வி. அருளாம்பிகைக்கும் நிகழும் 1944-ம் ஆண்டு ஜூலை௴ 1-ந்உ சனிக்கிழமை பகல் 1 மணிக்கு மணமகளில்லத்தில் விவாகம் நடைபெறும்.

நண்பர்களும்சுற்றத்தவர்களும் சமூகமளிக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

Mis 61 29-6-44


# உலகம்பல்விதக் கதை

(முற்றொடர் — 8)

### "அறிவிலார்க் குரைப்பவர் அவரிற் பேதையர்"

அந்த மூவரும் படக்காட்சிச் சாலைக்குப் போனபோது, அங்கே இடையிற் பத்துநிமிஷநேரம் ஓய்வு விடப்பட்டிருந்தது; அப்பொழுது பாலசிங்கன் "எங்களுக்கு மூன்று 'டிக்கற்' (பிரவேசச் சீட்டு) தரவேணும்" என்று சீட்டுக்கொடுக்குமிடத்தில்நின்றவனைக்கேட்க, அவன் "பாதிக்காட்சி முடிந்துவிட்டது, இப்பொழுது ஓய்வு நேரம், நாளைக்கும் இதே காட்சிதான் நடக்கும்; நீங்கள் வேணுமானால் வந்து பார்க்கலாம்" என்று சொன்னான்; "பாதிக்காட்சி முடிந்து போனால், அதனாலே வரும் பொருள் நட்டம் எங்களுக்கல்லாமல், உமக்கல்ல; பணந்தருவோம் "டிக்கற் தருகிறீரா? இல்லையா" என்று பாலசிங்கன் சிறிது வெருட்டிச் சொல்ல, "அறிவிலார்க் குரைப்பவர் அவரிற் பேதையர்" என்று மெல்லச் சொல்லிக்கொண்டு, எந்த வகுப்பு "டிக்கற்" தேவை என்று அவன் கேட்க, "எந்த வகுப்பானாலுஞ் சரி, கொடும்" என்றான் வீரசாமி. "சரி, முதல்வகுப்பு டிக்கற் மாத்திரம் இருக்கிறது; மற்றை வகுப்புக்குரிய சீட்டுக்கள் செலவாய்விட்டன; தருவதா" என்று கேட்க "ஓம்" என்றான் வீரசாமி; மூவருக்கும் முதல்வகுப்புக்குரிய மூன்று சீட்டுக்களைக் கொடுக்க அவர்கள் பணத்தைக் கொடுத்துவிட்டு விரைந்து மண்டபத்துட் புகுந்தவுடனே நேரில மதுபானம் வழங்கப்படும அறைக்குட்போய் ஐந்து ரூபா நோட்டைக்கொடுத்து தலைக்கொருரூபாவாக மூன்றுபேருக்கும் மூன்று ரூபாவிற்கு மதுபானந்தா என்று வீரசிங்கன் கேட்க, மதுபானம் விற்பவன் அப்படியே கொடுக்க, மூறையே மூவரும வாங்கிப் பருகினார்கள். ஐந்து ரூபாவில் எஞ்சிய இரண்டு ரூபாவையுந்தரும்படி வீரசாமி கேட்க, மதுபானம் விற்பவன் "இப்பொழுது இங்கே சில்லறை" இல்லை; காட்சிமுடிவதற்கிடையில் மாற்றிக்கொண்டுவந்து தருகிறேன்" என்று பதில் சொன்னான்; "பிறகு பணந் தரவேண்டாம், அந்த இரண்டு ரூபாவிற்கும இன்னமும் குடிவகை தா" என்று பாலசிங்கன் கேட்க, மதுபானம் விற்பவன் அப்படியே இரண்டுரூபாவிற்கும் மதுபானத்தை மூன்றாகப் பகிர்ந்து வார்த்து மூவருக்குங் கொடுத்தான்; அதையும வாங்கி மாந்தினார்கள். உடனே மூவரும் மண்டபத்துட் சென்று, வெற்று நாற்காலிகள் ஒருபக்கமாக அங்கே இருப்பவும், அவைகளின்மீது தனித்தனி இருப்பதை விடுத்துப் பெண்கள் ஒருபக்கமாக இருக்குமிடத்திலுள்ள வெற்று நாற்காலிகளில இருக்கும்படி போனார்கள்; போதலும அங்கே நின்று மேற்பார்வை செய்பவன், அரோகதிடகாத்திரமுள்ளவன், விரைந்து அவர்களுடைய சமீபத்தில் வந்து "நீங்கள் அங்கேயிருக்கும் வெறும் நாற்காலிகளில இருங்கள், பெண்கள் ஒருபக்கமாக இருக்குமிடத்திற் போயிருப்பது முறையல்ல" என்று நயமாகச் சொன்னான். "ஏ, இங்கே நாடகம பார்க்கச் சும்மா வரவில்லை, எங்கள் பணத்தைக் கொடுத்து 'டிக்கற்' எடுத்துக்கொண்டே வந்தோம, முதலவகுப்பில் நாங்கள் நினைத்த இடத்திற் போயிருப்போம்" என்று பாலசிங்கன் அதட்டிக்கொண்டு வீரசாமியையும் வீரசிங்கனையும் இழுத்தபடி பெண்களுக்குப் பக்கலிலே போயிருக்க முயல, மேற்பார்வைக்காரன் "எங்கே, போபார்ப்போம், என்று முற்பட்டு வந்து பாலசிங்கனுடைய மார்பிலேபிடித்துத்தள்ள, அப்பாடி! யென்று கத்திக்கொண்டு பாலசிங்கன் தன் பின்சென்ற வீரசாமி மீது மோதுண்ண, வீரசாமியும் மதுவெறியினால் தள்ளாடிக்கொண்டு தன்பிறகே தொடரும் விசுவநாதன்மீது மோத, மூவரும ஒருங்கு பெருஞ் சத்தத்துடன் விழுந்தனர்; அயலேயிருந்த பெண்கள் கலகமென்றுபயந்து இருக்கைவிட்டெழுந்து கலங்கவே, அவர்களைச் சேர்ந்த ஆண்கள் தாமிருந்த இடத்தை விட்டெழுந்து பெண்களிருக்குமிடத்திற்கு ஓடிவந்தனர்; வந்தவர்கள் விழுந்து எழும்பமுடியாமற் கிடக்கும் மூவரையும் உழக்கிக்கொண்டே போய்ச்சேர்ந்தனர்; கிடந்த மூவரும் ஓலமிட்டனர்; இதனாற் பெரும அல்லோலகல்லோலம் ஏற்பட்டது; இதற்கிடையில் படக்காட்சி மண்டபத்திற்குரிய அதிகாரிகளுஞ் சிலரும் வந்து கலகத்தையும் அமைதியீனத்தையும் அறிந்து அந்த மூவருமே அவைக்குக் காரணரென்பதை யுணர்ந்து அவர்களைத் தூக்குவித்துத் தெருவிலே போடுவித்துவிட்டு, மண்டபத்தில் அமைதியை ஆக்கிக் காட்சியை நடக்கச் செய்தனர்.

### விசாலாட்சி கொண்ட கவலை

தெருவிலிடப்பட்ட மூவரையும் அறிந்தவர்களும் அவர்களோடு தொடர்புடையவர்களுமாகிய சிலர் தாங்கள் படம் பார்ப்பதை விடுத்து அவர்கள் கிடக்குமிடத்திற்கு வந்து அவர்களுடம்பிலே தண்ணீர்தெளித்தும், வெறி முறியக்கூடிய சில கைமருந்துகளை அவர்கள் உச்சியிலிட்டும் அவர்களுக்குப் பருக்கியும் சைத்தியோபசாரஞ் செய்து ஒருவாறு அறிவுவரச் செய்தனர்; வீழ்ந்தமையினாலும் உழக்குண்டமையினாலும் உடம்பில் ஊறும் நெரிவும் இடையிடையே உண்டாயிருப்பக் கண்டனர்; உடனே அவர்கள் ஒரு மோட்டாரத்தை ஒழுங்குசெய்து அந்த மூவரையும் அதில் ஏற்றி வைத்தியசாலைக்குக் கொண்டுபோயினர். அன்று அருணாசலம்பிள்ளையும் மனைவியும் அங்கே படம்பார்க்க வந்தவர்கள் தங்கள் மருமகன் பட்ட அவமானத்தை அவதானித்துக்கொண்டார்கள்; ஆனால் எவருக்கும் வெளியிட்டிலர்; தங்கள் மகளுக்கும ஆச்செய்தியை மறைத்து வைத்தனர்; அடுத்தநாட் பின்னேரம், அயல்வீட்டிலுள்ள காமாட்சியென்னும பெண், விசாலாட்சி வீட்டிற்போய் ஆவு நடந்த இந்த விஷயம் முழுவதையும் விசாலாட்சிக்கு இரகசியமாகச் சொல்ல அவள் கேட்டுத்திராக்கவலைகொண்டாள். வைத்தியசாலையிற் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த மூவருமதங்கள் ஊறுகள் பாதி மாறியும் மாறாமலும இருக்க, வைத்தியசாலை அதிகாரிகளின் சொல்லையுங் கேளாமல மூன்றாநாட் பொழுதுபட்ட நேரத்தில வைத்தியசாலையை விட்டகன்றனர். பின்னரும் சில தினங்கள் தமக்கு வசதியான வைத்தியரிடத்திற் போய்ச் சிகிச்சை செய்வித்து ஒருவாறு தத்தம ஊறுகளை மாற்றிக்கொண்டார்கள்; வைத்தியசாலையை அந்த மூவரும் விட்டகன்றமைக்குக் காரணம, ஊறுகளை மாறும்வரையும் எவ்வகையான மதுபானத்தையும் குடிக்கவொண்ணாதென அங்குள்ள 'டக்ரர்' மார் தடுத்தமையேயாகும். இளமையோடு கூடியவர்களாதலினாலே அவர்களுடைய உடம்பிலுள்ள

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டுவிற் புலவனை மறந்தாயோ!

மாசிலா—சிவதாஸ்; திருக்கோணமலை

யாழ்ப்பாணத்து மட்டுவிலெனும் பூஞ்சோலையில் உதித்த உபாத்தியாயப் பூங்கொடியில், மலர்ந்த மலர்களுள், நறுந்தமிழ் மலராய் விளங்கி இலங்கையெங்கணும் தமிழ்மணம் பரப்பிக், கலைத்தொண்டே நிலைத் தொண்டாய்க் கருத்துட் கொண்ட மலர் மகாலிங்க சிவமலர் என்பம்.

இம்மலரே சிவனது பாதாரவிந்தங்கட்கு உகந்தமலர் என்பதையறிந்த தேவுக்கள், யாருமறியாமலே கவர்ந்தோடி விட்டனர். மலர் மறைந்ததேயென்றறைந்த மொழி இலங்கை யெங்கணும் வெதுப்பிற்று. கலைச்சுவை மாந்தர் கவிச்சுவை இழந்தனர்! கவிவாணர் கண்ணீர் சொரிந்தனர்! தமிழ்த்திரு அணங்கு ஏங்கித் தவித்தனள்! மலரைச் சூழ்ந்து தமிழ்மது அருந்திய மாணவர் என்னும் வண்டினங்கள் தாயை இழந்த கன்றுபோல தத்தளித்தனர்.

இற்றைக்குச் சில ஆண்டுகட்கு முன்பே இக்கலைமலர் எங்களைவிட்டு மறைந்ததெனினும், மறந்தெங்ஙனம் ஆற்றுவோம் அதன் பிரிவை.

இம்மலரானது ஒரு சைவப்பழம்! கலைக்காசு! கவிச்சிங்கம், கருவிருந்த காலத்திலேயே, கலையுரிமைத் திருமெய்தித், தெருவிருந்து விளையாடும் பருவத்தும் தமிழினிமை செழிக்கவூட்டியவர் புலவர் மகாலிங்கசிவம் அவர்களே யாவர். இவர் ஈழநாட்டில், சிறப்பாக யாழ்ப்பாணத்தில் தமிழ்க்கலை வளர்ச்சி விரும்பிப் புரிந்த அரும் பெருந் தொண்டுகள் அளவிடப்பாலன வல்ல. எந்தச் சபையிலும் எங்கள் புலவர்பெருமான் வீற்றிருப்பதைக் காணலாம். அவர் வருந் மேன்டைகளுமில்லை; சொற்பொழிவாற்றுந் சபைகளுமில்லை;

இவரது சாந்தமுறு முகமும் தண்ணளிசேர் கண்ணும், சொற் பொழிவின் இன்சுவையும் சபைகட்குத் தனிச்சிறப்பை உண்டுபண்ணுவனவாகும்.

சிட்டர் புகழும் புலவர் மகாலிங்கசிவத்திடம் மற்றை இக்காலப் புலவர்கள்போல், பட்டுடையில்லை, ஆடம்பர நடையில்லை, வெளிட்ட கட்டுமில்லை, பொட்டுமில்லை, புனைவிரலிற் பொன்கணையாழியுமில்லை, கட்டுமில்லை, செருக்குமில்லை. இத்தகைய ஒரு புலவரின் மறைவு பெரும்பாலும் யாழ்ப்பாண மக்களை மிகவும் வாட்டுகின்றது. இப்புலவரது தூலவுடல் மறைந்ததெனினும், புலவராற்றிய கலைத்தொண்டும், அவரது தமிழ்ப் புலமையும் என்றென்றும் மறையா. இத்தகைய புலவருக்கு நாம் செய்த கைம்மாறென்ன? புலவரின் மறைவைப்பற்றிய நினைவுமலர் வெளிவரப்போவதாகப் பத்திரிகைகள் அறிவித்தன. பணமும் சேர்க்கப்பட்டது. வருடங்களும் பலவாயின. ஆனால், நினைவுமலரோ வெளிவரவில்லை. சென்றவருடம் நான் யாழ்ப்பாணம் போயிருந்தபோது, புலவரவர்களின் சகோதரரும், இந்துக்கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதருமான ம. வே. தி. சம்பந்தப்பிள்ளை அவர்களைக் காணும்பொருட்டு அவரில்லம் சென்றேன். அப்போது அவருடன் பல விஷயங்களையிட்டுச் சம்பாஷித்த பின்பு, புலவரவர்களின் நினைவுமலர் மறைவு மலராய் மாறிவிட்டதோ என அவரை வினவினேன். அதற்கவர் "இல்லை, இல்லை சீக்கிரம் வெளியாகும் காகிதக் கட்டுப்பாடு குறைந்ததும் தாமதிக்க வேண்டியிருக்கின்றது" என விடை கூறினார். நினைவுமலரின் வருகையை எதிர்பார்த்தவண்ணமிருந்த எனக்குப், பண்டிதரவர்கள் கூறிய விடை பதின்மடங்கு ஆவலை உண்டுபண்ணிற்று. புலவரவர்களின் நினைவு மலரை வாசிக்கும் பாக்கியம் எனக்கு இப்போது கிட்டுமோ தெரியவில்லை.

எங்களது ஊக்கமின்மையாலேயே தமிழ்ப் பாஷைக்கும் தமிழர்களாகிய எங்கட்கும் பெருங் குறைகள் ஏற்படுகின்றன. ஈழநாட்டில் தமிழ்ப்புலமை வாய்ந்த எத்தனையோ பெரியார்களின் வரலாறுகள் அழிந்துவிட்டன. உதாரணமாக திருக்கோணமலையிலே பிறந்து வளர்ந்து, வித்தியாரம்பம் பெற்று, உயர்தரக் கல்வி கற்கும்பொருட்டு சென்னை சென்று அங்கு வித்துவான் பட்டமும் பெற்று, மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் உயர்ந்த பதவியிலமர்ந்து, தமிழ்த்தொண்டாற்றிய வித்துவான் கனகசுந்தரம்பிள்ளையவர்களின் வரலாறெங்கே? தற்கால உலகம் அவரை நினைக்கின்றதா? அல்லது திருகோணமலைவாசிகட்குத்தானும் தெரியுமா? இல்லை; இல்லை; ஏன்? திருகோணமலைவாசிகளின் ஊக்கமின்மையே காரணமாகும். இத்தகைய பெரியார்களின் வரலாறுகள் அச்சுவாகனமேறின், வருங்கால உலகிற்கு வழிகாட்டியாயிருக்குமல்லவா? மேல்நாட்டாரைப் பாருங்கள். அவர்களது பாஷைப்புலமை வாய்ந்த பெரியார்கள் மறைந்து விட்டால், வரலாறு எழுதுகிறார்கள்; சிலைகட்டுகிறார்கள்; அவர்களியற்றிய நூல்களையெல்லாம் தொகுத்துப் புத்தகரூபமாக வெளியிடுகிறார்கள். அவை பள்ளிப்புத்தகங்களாக அமைக்கப்படுகின்றன. இதனால் அவர்களது புலமையை எவரும் அறியக்கிடக்கின்றது. ஆனால் நாம் என்ன செய்கிறோம்? தூங்குகிறோம். இதனால் உரிமை இழந்துவிட்டோம்.

இப்போது மலர் அச்சிடுவது கஷ்டமாயின், எங்கள் புலவரைப் பற்றி தற்காலப் பெரியார்கள் வரைந்தனுப்பிய, வரலாறுகளையும் கவிகளையும் இந்துசாதன மூலமாய் வெளியிட வேண்டும். பின் இவற்றைத் தொகுத்துப் புத்தக ரூபமாய் வெளியிடலாமே. இவ்விஷயத்தில் மிக்க ஊக்கமெடுத்து சீக்கிரம், பத்திரிகையில் புலவரைப்பற்றிய குறிப்புகளனைத்தையும் பிரசுரஞ் செய்யுமாறு இந்துசாதனப் பத்திராசிரியர் ஐயா அவர்களை மனமார்ந்த வந்தனத்துடன் வேண்டுகின்றேன்.

யாழ்ப்பாணத் தமிழபிமானிகளே இன்னும் தூக்கமா? விழிமின்! உங்கள் நாட்டுக் கலைவானில் தோன்றிய விண்மீன்களுள் மிக்கொளி வாய்ந்த தொன்று மறைந்துவிட்டது. அதை நினைமின்! வருங்கால உலகமும் அதை நினைக்கும் வண்ணம் வேண்டியவை புரிமின்! புலவன் மகாலிங்கசிவமதைப்போலவரைப் பார்க்கலாமோ?

தங்களன கலைமதிசேர் மகாலிங்க
சிவனுரைசெந் தமிழ்ப்பாட்
டினமுண
கொருவர் தமிழ்பாடலென்றி
டுமோ
புலவர் செவிக் கினிமையாமோ!

(மகாலிங்கசிவ நினைவுமலரில் ஒரு பாகம் அச்சாகி வரும்போது காகிதக் கட்டுப்பாடு நேர்தலாயிற்று. குறித்த மலர் வெளியீட்டைப் பூர்த்திபண்ணும் வண்ணம் காகிதம் உதவும்படி பல காரணங்காட்டி குறித்த காகிதக் கட்டுப்பாட்டதிகாரிக்கு விண்ணப்பஞ் செய்தபோது, அவர் அதற்கு அநுமதி செய்ய மறுத்துவிட்டனர். மலர் வெளியீட்டிற்காகிய கையெழுத்துப் பிரதிகள் அவதானமாகச் சேமித்து வைக்கப்பெற்றுள்ளன; காலகதியில் வெளிவருமென்பதில் ஐயமில்லை.)

—பத்திராசிரியர்

# கல்வெட்டு வசனம் 3

அ. வி. மயில்வாகனன், புத்தளம்

யாம் முன் கூறியவாறு 'இ' 'உ' என்பனவே பெரும்பாலும் கல்வெட்டில் இருப்பினும் ஈ, ஊ, என்னும் நெடிலெழுத்துக்களும் உள. க. 44 வ. 12. வேலூர் உடைய கீழ்க்கோட்டிய etc என்பன காண்க. அன்றியும், மெய்யெழுத்துப் புள்ளி விரவாது இக் கல்வெட்டுக்கள் எழுதப்படுதலின் இவற்றை விளங்கல் இன்னும் கூடியகடுமையாகின்றது. அதனோடு இன்னுமொரு விஷயம்:- ர், ர், ர, என்ற இம் மூன்று அடையாளங்களுக்கும் 'ர' எனும் மூன்றுவது அடையாளமே கொடுபட்டிருக்கும். அப்படியே 'கொ' என்னும் எழுத்து:- கொ, கோ, கெ, கே, கொ, கோ என்று இத்தன்மையவாய பல எழுத்துகளைச் சுட்டிநிற்கும். இம்முறையிலெழுதின், 'கோளர்' என்னுஞ்சாதியாரை 'கொளர' என்றே எழுதுதல் வேண்டும். கல்வெட்டுக்களிலும் அப்படியே இருக்கும்.

சிலவிடங்களில் வடமொழி வழக்குக் கொஞ்சம் அளவு கடந்திருக்கும். தமிழ்ச் சொல்லிலேயே கிரந்த ஒலிபுகுந்துவிடும்:- உ-ம்: தகியன் தனசெழில், ......................என்பன. 'ந' 'ன' களின் இடமாற்றம் இப்படிப்பலவிடங்களில் உண்டு. வேறும் சில வருமாறு:- "அவ்வவ் கூறுடையானே பெறுவானாகவும்" இங்கே ஈற்றயலெழுத்திற்குப் பின் 'என்று', என வருதல் வேண்டும். என்றிக் ககரம் இரட்டிக்கப் புணர்ந்தமையுங் காண்க. இனி, 'மஞ்சிக்கத்தில, நனதி பன ஆறிரத்து, வாக்கால், தெகுகு, தெறககு, மேறக்கு, வடபாறக்கெல்லைககு முட்பட்ட, ஒருபாறமெல்லை. தமிழிர், கனடிகர், இலாளர் (Gujarat) காமதிதை உள்பட, ஆயசூர, ஓலையுகம், *அஞ்சுகழஞ்சு, லாஜங்கள் எழுத்து 56, 12 †

உடம்படுமெய் உபயோகத்துள்ளும்; ந, ண, வழக்குள்ளும், வன்தொடர்ப்புணர்ச்சிகளுள்ளும் சாந்திலிகளுள்ளும் பெரும்பாலும் பிழைகள் காணகின்றன. தெற்கு, மேற்குளன்னும்போது வல்லினத்திறகுரிய உச்சாரண மாத்திரை கூட வழங்கியது மேதான்றுகின்றது.

தேன், ஏறு, என்னுஞ் சொற்களிற் காணும் 'எ' இரு சத்தங்களை உடையதாகவருகின்றது. 'இவனே' என்பதில் முன்னைய உச்சரிப்பே உண்டு. இவ்வுச்சரிப்பைச் சில யெழுத்துக்களில மிகத் துலக்கமாகத் தீட்டுவதற்கு, ஈற்றில் (ய்) யையும் சேர்த்துள்ளார்கள். ஆதலின், (66, 10, 75, 10) இவனேய், பெருமக்களேய், தாங்களேய், மண்டகத்தேய்-எனச்சொற்கள்வரும். அன்றி, 'ஐ'யும் அப்படியே. எண்டிசைய், தங்கைய், என்பன காண்க. அவ்வழக்கு எழுத்தில் இல்லாவிட்டாலும் சென்னைத் தமிழருடைய பேச்சில் பரக்கவுண்டு. அவர் உரையாடும்போது "நிறைய" என்னுஞ் சொல்லை உச்சரிக்கும்விதம் காண்க. 'நிறைய்ய' என வரும்!

'ஊ'விற்குப் பதிலாக 'உ'வைவிடப்பட்டதென முன் கூறினோம். இங்கு ஓரிடத்தில 'உ'வ் விற்குப் பதிலாக 'ஊ' வந்திருப்பது கூர்ந்து நோக்கத்தக்கது. உ-ம்: காத்துள்ளும் (60, 6) என்பது.

சிற்பிகள் வழங்கிய நெடுங்கணக்குகள் காலத்துக்குக் காலம் மாறுபட்டு வந்திருக்கின்றன. ஆதலின் பிராமி எழுத்துத் தோன்றிய பின் அசோக லிபி பிறந்தது, அதன்பின் பழையகிரந்தம், புதியகிரந்தம், வட்டெழுத்து, கலப்பெழுத்து என வடிவெடுத்து இன்று இவ்வுரு வேற்று வருகின்றது தமிழ்! இவ்விலிபிகளையெல்லாம் அவ்வக்காலத்தில் எழுந்த கல்வெட்டுக்களுள் காணலாகும். இதன்விரிவைப் பண்டைத் தமிழ்ச்சொற்கள் என்னும் நூலுட் காண்க.

உதாரணமாக செங்கல்பட்டு ஜில்லாவில் உக்கல் கிராமத்திலுள்ள விஷ்ணுவாலயத்தில் இராசகேசரி வர்மன் தீட்டிய கல்வெட்டைக் காண்க. அதுவருமாறு:-..............
.......................................................

இன்னொரு வீரப் பிரதாபம் (மெய்க்கீர்த்தி) வருகின்றது பாருங்கள்:- ஸ/வி ஸி/த ஸ்ரீ] திருமகள் போலத் பெருநிலச் செல்வியும்] தனக்கேயுரிமை பூண்டமை மனக்கொளச்] காந்தளூர்ச்சாலைகலமறுத்தரு] வெங்கைநாடுங் கங்கபாடியும்] நுளம்பபாடியும் குடமலை நாடும்] கொல்லமுங்கலிங்கமும்] எண்டிசை புகழ்தர ஈழமண்டலமும்] திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டு] தன்னெழில் வளருழி எல்லாயாண்டு] தொழுதெழவிளங்குயாண்டே] செழியரைத் தேசுகொள ஸ்ரீ கோவிராஜ இராஜகேசரி etc ......

இவை பெரும்பாலும் அகவற்பாவில அமைந்துள்ளன வாயினும் அந்த அகவலோசையை அவற்றுட் காணவில்லை° அன்றியும் சில விடங்களில் (பா 14, 68 L 1) வழக்களும் தோன்றியே விடுகின்றன. மேற்கூறிய உதாரணத்துள் 'புது மணம் புணர்ந்து' என்பதைத் தனி வரியாகக் கொள்ளல் வேண்டும். கொள்ளினும் அது வஞ்சிப்படியாகாது.

இலக்கிய வழக்கு மொழிகள் சிலவும் இதனுள் உள. நால்கு 27, 4, இழுநதாதி 69, 15 அருளுகை செய் (வயல்) 20, 4, 5, இவை பொருநாற்றுப்படை, சிந்தாமணி முதலியவற்றுள் வந்துள-மு. புரவி நால்குடன் பூட்டி, ஆனால், பொது வழக்கில இவை இல்லை.

கல்வெட்டு முடிபுகள் கவனிக்கத் தக்கவை. குறித்த காணி பலருக்கு உரியதாயின் அப் பலர் பெயரும் ஆண்டுக் காணப்படும். ஆனால், அரசன் குடிகளுக்கேனும் கோயிலுக்கேனும்வழங்குவதானால் அவன் முன்னோர் பெயரும் அவனுடைய மறுபெயர்களும் சூட்டு நாமமும் ஆங்கே வரும். ஆகக் கடைசியில ஆக்கியோன் கைச்சாத்தும் இருக்கும். அவன் இன்னார் ஆணைப்படி வெட்டியதாகவும் கூறுவன். eg. Vol. 4 107, 184 வரோதபபட்டா, வாசுதேவ பட்டர் என்பன காண்க. 9, 34 ல "இசெவ என்னெழுத்து" என்னும் சில்பி கூறும் வழக்கு இருந்ததாகத் தோன்றுகிறது. அன்றி, ப. 3, 9, 23- இவை தொண்டைமான் எழுத்து, இவை விழிஞ்ஞதரயன் எழுத்து, இவை வரகுணராஜன் எழுத்து, இவைவிழுப்பாதாரயன் எழுத்து, இவைகப்பவாண பயன் எழுத்து, என்பன பொதுவாக வரும்.

மணிப்பிரவாளத்துள் 'நாயேன் த்' என்று காணும் வழக்குப் போன்று இங்கே; என், ஏன, ஓம், என்பன மொழி ஈற்று வழக்காக வந்துள. உ-ம்: அலங்காரன சிராமனென, (74 12) சம்புவராயனென

(தொடர்ச்சி 4 ம் பக்கம்)

* அஞ்சுக்கும் சஞ்ய முன"
† Chinnamanoor plates.

° பன்னிருபாட்டியல் 311— "சீர்நான் காகியமண்டி தொடையாய்' வச்சணந்தி; 'செழிலார்ந் தமெய்க்கீர்த்தி சொற்சீரடியால எழிலரசர் செயதியுரைப்ப etc'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேக்கிழார்

[ஸ்ரீமதி. கரும்பசோல்லி அம்மையார் திருவையாறு]

திருஞான சம்பந்தர் தேவாரம் முதலாக பெரியபுராண மென்னும் திருத்தொண்டர் புராணமீறாக சைவத்திருமுறைகள் பன்னிரண்டாகும். அவற்றுள் பன்னிரண்டாவதாகிய பெரியபுராணம் பத்திச்சுவைநனி சொட்டும் செந்தமிழ்ப் பாக்களால் இயன்றது. தமிழ் மணமும் சைவமணமும் ஒருங்கே கமழ்வது, பண்டைத் தமிழ்நாட்டின் சிறப்பைச் செவ்வனே எடுத்துக்காட்டுவது. சைவ சித்தாந்த நூற்கருத்துக்களுக்குத் தக்க எடுத்துக் காட்டுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. சிற்றம்பலத்தெம் பெருமான் "உலகெலாம்" என எடுத்துக்கொடுத்த முதலையுடையது.

இத்தகைய அரும்பெருந் தெய்வத்திருமுறைத் தமிழ்மொழிசெய்த தவப்பயனாக உலகுக்கு வழங்கிய பெரியார் சேக்கிழார் என்ற சிறப்புப் பெயர்பெற்ற அருண்மொழித் தேவர் ஆவர்.

இப்பெரியார் சான்றோர் உடைத்தென ஔவையார் புகழ்ந்து கூறிய தொண்டைவளநாட்டுக் குன்றத்தூரில் வேளாண் குலத்தில் சேக்கிழார் குடியில் தோன்றினர். அக்குடிக்கு அவர் ஒரு திலகம் என விளங்கியதால் குடியின் பெயராலே இவரைச் சேக்கிழாரென்றே வழங்கினர். சிற்றிளம் பருவத்திலேயே கல்வி கேள்வி அறிவு ஒழுக்கங்களில் இவர் சிறந்து விளங்கியதால் இவரது புகழைச் சான்றோர் பலர் கூறக்கேட்ட, "சென்னி அபயன் குலோத்துங்கச் சோழன் தில்லைத் திருவெல்லை. பொன்னின் மயமாக்கிய வளவர்போரேறென்று" புகழப்பட்ட சோழமன்னன் தன் முதல் அமைச்சராக இவரை அமைத்துக் கொண்டான்.

அமைச்சு பூண்டோர்க்கு நுண்ணிய இயற்கையறிவும், திண்ணிய கல்வியறிவும், எண்ணிப்பேசும் சொல்வன்மையும், அரசனபால் போக்கும், குடிகளிடத்து அருளும் இன்றியமையாதன. இவையனைத்தும் ஒருங்கு வாய்க்கப்பெற்றிருந்தார் அருண்மொழித்தேவர்.

சமண காப்பியமாகிய சீவகசிந்தாமணிச் சுவையிலே அரசன் மூழ்கியிருப்பதைக்கண்டு, அது தகுதியன்றென எடுத்துரைத்தும், அடியார் பெருமைகளை எடுத்துரைத்தும், அவனது வேண்டுகோளினால் திருத்தொண்டத் தொகையை விரித்துத் திருத்தொண்டர்புராணமியற்றினர். இந்நூல் சிதம்பரத்திலே தொடங்கி முடிவுபெற்று, ஆண்டே அரங்கேற்றப் பெற்றது. அங்கு இந்நூலைக் கேட்க வந்திருந்த அரசர்கள், மடாதிபதிகள், புலவர் பெருமக்கள் முதலிய பல்லாயிரக்கணக்கானவர்களுக்கும் அரங்கேற்றுதல் நடைபெற்ற ஓராண்டு முழுவதும் வேண்டிய உணவு உறையுள், மருந்து முதலிய எல்லா வசதிகளையும் அநபாய அரசனே அளித்தான். அரங்கேற்றம் முடிவில் புராணத்தையும் அதன் ஆசிரியரையும் யானைமீதிருத்தித் திருவலம் செய்வித்துப் பெருமைப் படுத்தினன். ஆசிரியருக்குத் தொண்டர்சீர் பரவுவார் என்னும் பட்டம் அளித்துக் கவரிவீசிச் சிறப்புச் செய்தான். அம்மன்னனது அன்பும், அருளும், சைவப்பற்றும், அடியார்பணியும் எத்துணையென யாம் கூற வல்லமோ!

சேக்கிழார் இயற்றிய நூலின் சுவைகளில் ஒருசில ஈண்டுக் கூறுவாம். இந்நூலிலுள்ள பலவகைச் சுவையிலும் பத்திச்சுவையே ஏனைச் சுவையிலும் குறிப்பாகக் குறித்துக் கொள்ளத்தக்கது. ஆண்டான்

அன் விகுதியாற் கூறினும் அடியார்களைக் கூறுமிடத்தோறும் ஆர் விகுதி வைத்தே இளையான் குடிமாறனார், மானக்கஞ்சாறனார் என்பன போலக் கூறியுள்ளார். இவர்கூறிய திருக்கூட்டச் சிறப்பு அடியார்களின் இலக்கணம் என்றே கூறலாம். எடுத்துக்காட்டாக, "மாசிலாத" "பூதமைந்தும்" 'கேடும் ஆக்கமும்' 'ஆரங் கண்டிகை' என்னும் முதலிய பாடல்களைக் காண்க.

இயற்கைப்பொருளை வருணிக்கும்போதும் பத்தியின் பண்பையும், செயலையும் உவமை காட்டுவது இவர்பாலுள்ள தனிப்பண்பாகும். எடுத்துக்காட்டாக திருநாட்டுச் சிறப்பு 6, 7, 21, 24, 92, 159 முதலிய செய்யுள்களைக் காண்க.

சைவ சமயத்தில் அவர் கொண்டிருந்த பற்று சாக்கிய நாயனார் புராணம் 5-ம் செய்யுள், சண்டேசுரர் புராணம் 9-ம் செய்யுள் முதலியவற்றால் அறியலாம். முற்கூறிய செய்யுள்களிலேயே சைவ சாதனங்களாய திருநீறு, திருவைந்தெழுத்து என்பவற்றில் இவர்கொண்டிருந்த பற்றும் புலனாகும். அடியார்களுக்குத் தலைபடமே சிறிட்டதாகச் சொல்லவேண்டிய கட்டாயம் ஏற்பட்ட சில இடங்களிலும் படிப்போர், கேட்போர் மனமும் செவியும் வருந்தாவண்ணம் மங்கலமாக, குறிப்பாகக் கூறிச்செல்வது இவரியல்பு. உதாரணமாக ஏனாதிநாதநாயனார் புராணத்தில் "முன்னின்ற பாதகனும் தன்கருத்தே முற்றுவித்தான்" எனவும், மெய்ப்பொருள் நாயனார் புராணத்தில் "பத்திரம் வாங்கித் தான் முன் நினைந்த அப்பரிசே செய்ய, மெய்த்தவ வேடமே மெய்ப்பொருளெனத் தொழுது வென்றார்" எனவும் வருவன காண்க.

குலத்தானும், செய்து வந்த தொழிலானும், தொண்டானும், அடைந்த அநுபவ நிலையானும், பலவேறு வகைப்பட்ட அடியாரின் வரலாறுகளைக் கூறும்போது அவ்வந் நிலம் குலம் தொழில் தொண்டு நிலைமை முதலியவற்றைச் செவ்வனே அளவிட்டுக் கூறுவர். உதாரணமாக அந்தணராகிய திருஞான சம்பந்தர் வேளாளராகிய இளையான்குடிமாறர் வேடராகிய கண்ணப்பர், புலையராகிய திருநாளைப்போவார், செம்பட வராகிய அதிபத்தர், வண்ணாராகிய திருக்குறிப்புத் தொண்டர் முதலிய நாயன்மார்களின் புராணங்களிலே காணலாம். இறைவனை வணங்குதல் முதலான சேவைகளில் அன்பர்களுக்கு நிகழும் மெய்ப்பாடுகளை கற்போர் உள்ளவாறு நேரிற் கண்டதுபோல் எடுத்துக் காட்டும் திறன் இத் தெய்வப் புலவருக்கு அமைந்ததுபோல வேறெவருக்கும் அமைந்திலது. எடுத்துக்காட்டாக 'ஐந்து பேரறிவு" எனும் அருமைச் செய்யுளை நோக்குக.

"ஞானசம்பந்தர் என்னும் நாமமந்திரம்" "அரசின் நாமம் வந்து," "நம்பியாரூரர் எனும் நாமம் நவின்ற நல்லத்தாலே" என்றுகூறியுள்ள பகுதிகளாலே இத்திருப்பெயர்களின் பெருமையும், அவற்றினபால் இவருக்குள்ள ஈடுபாடும் புலனாகும்.

அகப்பொருள் பற்றிய நிகழ்ச்சிகளைக் கூறுமிடத்தும் கதாநாயகர்களின் பெருமைக்கும் தம்முடைய தகுதிக்கும் தாழ்வுவாராதவகையில் சுவையும் குன்றுமல் கூறுந் திறமை வியக்கத்தக்கது. உதாரணமாக "அடிபகைதலை" "பேர்பரவை" "முன்னே வந்து எதிர்தோன்றும்"

தொடர்ச்சி ...-ம் பக்கம்

## கொழும்பு விவேகானந்த சபை

நிகழும் ஆனிமீ 12 (14-6-44) புதன்கிழமை விவேகானந்தசபையின் வருடாந்தக் கூட்டம் மேட்டுத்தெருவிலுள்ள ஷை சபை மண்டபத்தில் சபையின் தலைவரும் அரசாங்கசபை அங்கத்தவருமாகிய திரு. சு. நடேசனவர்களின் தலைமையின்கீழ் நடந்தது; கூட்டம் தேவாரபாராயணத்துடன் ஆரம்பமாயது. பின்னர்ச் சபையின் வருடாந்த அறிக்கை வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

அதன்பின், ராஜா சேர், அண்ணாமலைச் செட்டியாரவர்களும், இலங்கையில் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக இருக்கும் திரு. எம். எஸ். ஆனே அவர்களும் இலங்கை இராமகிருஷ்ண சங்கத்தின் தலைவராக இருக்கும் ஸ்ரீமத் சித்தாத்மானந்த சுவாமிகள் அவர்களும் சபையின் கௌரவ அங்கத்தவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

பின்னர்ச் சபையின் முந்திய வருடாந்தக் கூட்டத்தின் தீர்மானப்படி கொழும்பிலுள்ள சைவ நன்மக்கட்குத் தமிழ் மறைகளைப் பண் முறையுடன் பாராயணஞ் செய்யும் முறையைக் கற்பித்தற்கும் அவர்கள் சமய உணர்ச்சியை வளர்த்தற்கும் நன்கு தேர்ச்சிபெற்ற ஓர் சைவ ஓதுவாரைச் சபையார் வேலையில் அமர்த்துவதைக் குறித்து நிர்வாக சபையினர் ஆராய்ந்தனரெனவும் பிரதானமாகப் போதிய பணமின்மையால் அங்ஙனம் ஓர் ஓதுவாரை நியமிக்க இயலாதவராயினரெனவும் தெரிவிக்கப்பட்டது.

சபையின் விதிகளுள் சில திருத்தங்கள் செய்யப்பட்டபின், தலைவரவர்கள் கேள்விப்படி டாக்டர் பாலேந்திரா அவர்கள் சபையின் நிலத்தில் ஓர் புதிய கட்டிடம் அமைப்பதற்குத் தாம் போட்டிருந்த திட்டத்தைச் சுருக்கமாக விளக்கினர்.

அடுத்த ஆண்டிற்குப் பின்வரும் உத்தியோகஸ்தர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: அரசாங்கசபை அங்கத்தவர் திரு. சு. நடேசனவர்கள். வித்தியாலய மானேஜர்: கௌரவ திரு. அ. மகாதேவா அவர்கள் உபதலைவர்கள்: அரசாங்க சபை அங்கத்தவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலமவர்கள், அத்துவக்காத் திரு. ந. நடராசா அவர்கள்; திரு. எச். எம். தேசாய் அவர்கள், திரு. ச. பராசசிங்கமவர்கள், அரசாங்கக் கணக்குப்பரிசோதகர் திரு. க. கனகரத்தினமவர்கள், திரு. வ. செல்லமுத்து அவர்கள், புகைரதப்பகுதி மேற்பார்வையாளர் திரு. மா. கனகசபை அவர்கள், புகைரதப்பகுதியின் கணக்கு இலாகா உபதலைவர். திரு. அ. சபாரத்தினமவர்கள், பாரிஸ்டர். திரு. பெரிசுந்தரமவர்கள், டாக்டர் ஞா. விக்னராசா அவர்கள்.

நிர்வாகசபைத் தலைவர்: திரு. மா. கனகசபை அவர்கள் பொதுக்காரியதரிசி: திரு. சு. சிவசுப்பிரமணியமவர்கள். தனாதிகாரி: திரு. சி. நா. சோமாஸ்கந்தபிள்ளை அவர்கள், உபகாரியதரிசி திரு. அ. சிற்றம்பலமவர்கள்: உபதனாதிகாரி திரு. இ. பொன்னம்பலமவர்கள் வித்தியாலயக் காரியதரிசி திரு. சி. மனுநாயகமவர்கள் நகர்ப்புறக்காரியதரிசி திரு. எஸ். சுந்தரமூர்த்தி அவர்கள் நகர்ப்புற உபகாரியதரிசி திரு. க. அருணாசலமவர்கள் அங்கத்துவக் காரியதரிசி திரு. கா. பொன்னையா அவர்கள் இலக்காரியதரிசி திரு. ஆ. பாலசுப்பிரமணியமவர்கள் பரீட்சாவிஷயக் காரியதரிசி திரு. கே. சின்னத்தம்பி அவர்கள் பரீட்சா விஷய உபகாரியதரிசி திரு. சி. நா. சண்முகநாதனவர்கள் புத்தகசாலை அதிபர் திரு. கே. பொன்னையா அவர்கள் புத்தகசாலை உதவி அதிபர் திரு. வி. கதிரவேலு அவர்கள் வாசிகசாலை அதிபர் திரு. கு. சபாநாதனவர்கள் வாசிகசாலை உதவி அதிபர் திரு. கே. தம்பியையா அவர்கள் எழுத்துவிஷயக்காரியதரிசி திரு. T. சின்னத்துரை அவர்கள் முகாமைச் சபையினர் சபையின் உத்தியோகஸ்தர் நிர்வாகசபை அங்கத்தினர் திருவாளர்கள் கோ. ஆழ்வாப்பிள்ளை சு. [illegible] க. இராசநாயகம் டாக்டர். எஸ். இராமஜந்திரம் டாக்டர் வி. கே. [illegible] அவர்கள், திருவாளர்கள் இ. சபாநாயகம் பி. எஸ். துரையப்பா எம். எஸ். திருவிளங்கம் கே. பி. ஹாசன் க. இராமச்சந்திரா வி. பி. என். சுகம் சோ. சரவணபவன் சோ. நடராஜன் ஆகியோர்கள்.

உத்தியோகஸ்தரல்லாத நிர்வாகசபை அங்கத்தினர் திருவாளர்கள் எம். அம்பலவாணரவர்கள் எஸ். சிவசிதம்பரமவர்கள் கே. வி. எஸ். சுந்தரமவர்கள் என். நவரத்தினமவர்கள் கா. கனகரத்தினமவர்கள் ஆகியோர்.

இற்றில் தேவாரபாராயணத்துடன் கூட்டம் முடிவெய்தியது. —கடித.

## கல்வெட்டு வசனம் 3

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

147, 12 இவ்வூர் கூட்டத்தோம். மானதொங்கல் மல்லெருமனேன். 148 ஊர் செல்ல எழுகினேன்.

6, 7, 9 இல 'உரிய்' என்றொரு வழக்கு உண்டு. இஃது இகரத்தின்பின்னும் யகரமெய் வருதற்றோன்றலைக் காட்டும்.

மகர தோரணமும்' அதன் உபயோகமும் தமிழ்நாட்டில் அப்போதிருந்தமாதிரி இப்போதில்லை. அது சிங்களநாட்டில் மாத்திரம் இன்றும் பெருமையுடன் நிலவுகின்றது. கல்வெட்டு Vol. 3. 30, 13 தல் அதனைக் காணலாகும்.

அரச வரிகளின் பெயர் சில இங்கே வருதல். அவற்றின் உண்மை அளவு இன்னதென்று தெரியவில்லை. அவை:- வெட்டி, முட்டி, வெகாரி, சூலவரி, வடுபீறி, சபிவமானியம் என்பன. வெட்டி: ஒரு மாதத்தில் ஒருநாளைக்கு வேறொருவரைக் கொண்டு தனக்காக வேலை செய்வித்துப் பண்டை வழக்கல்.

வலலின ஒற்றுகள் உரிய இடத்தில பெய்யாது தவிர்க்கப்பட்டுள. உ-ம்: அவவ் கூழுண்டயான. 146 மண்டபத்து தென்புறம், 40, 8. திருபுகபடி. 9. என்பன. 'ன'ளும் சிலவிடத்தில் மதமிஞ்சி வருகின்றது. 145-11 வோகனமிச(ன)ளும் 13 மென தகைக(ல)ளும் etc.

கல்வெட்டுக்களுள் பெரும்பாலும் நட்டார் பெரியார் புண்ணியம் பெறுவர் என்றும் இடாதார் ஆழி குலத்தோர் அருநரகடைவர் எனவும் கூறியிருக்கும். வரும்,

## தமிழ் வேத பாராயணச் சங்கம்

நிகழும் தாரண வருடம் ஆனித் திங்கள் 12-ம் நாள் (25-6-44) ஞாயிற்றுக்கிழமை பிறபகல் 5 மணியளவில் கோண்டாவில் சைவ இளைஞர் தமிழ்வேத பாராயணச்சங்க ஆதரவில மலர்மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட வாசிகசாலை மண்டபத்தில மாணிக்கவாசகசுவாமிகள் குருபூசைத்தினம் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அவ்வமயம நால்வர் திருவுருவங்களும சிறந்து வைக்கப்பட்டு விசேடபூசை செய்யப்பட்டது. பின்னர் திருவாதவூரடிகள் புராணத்தில திருவடிபெற்ற சருக்கம் பொருளோடு படிக்கப்பட்டது. பின் மேறபடி சங்கத்தாரால சிவபுராணம் ஓதப்பட்டது. பின்னர், ஸ்ரீமத் த. அம்பலவாணசுவாமி அவர்களால "மாணிக்கவாசக சுவாமிகளின" திவ்விய சரிதம் பத்தியோடு பேசப்பட்டது. இடையிடையே திருவாசகம் சங்கத்தினரால் படிக்கப்பட்டது.

ஈற்றில், தீபாராதனை செய்யப்பட்டு ஆங்குக் குழுமியிருந்த நூற்றுக்கணக்கான அன்பர்களுக்குச் சிற்றுண்டி முதலியன வழங்கப்பட்டன. இரவு 10 மணியளவில் தேவார பாராயணத்தோடு கூட்டம் இனிது நிறைவேறியது.

—கடித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலஞ்சென்ற

# சேர். பிரபுல்ல சந்திர ரே

உலகப்பிரக்கியாதிபெற்ற இந்திய விஞ்ஞானிகளில் ஒருவர் சேர். பிரபுல்ல சந்திர ரே. அவர் சென்ற 16ந் தேதி காலமானார். அவரது மரணம் இந்தியாவுக்கு, ஏன், உலகத்திற்கே ஈடுசெய்ய முடியாத ஒரு நஷ்டமாகும். விஞ்ஞான அறிவில் இந்தியர் பின்வாங்கவில்லை என உலகத்திற்கு எடுத்துக்காட்டியவர்களில் திரு. ரேயும் ஒருவர். இரசாயன சாஸ்திர ஆராய்ச்சியிலதான் இப்பெரியார் இணையற்ற நிபுணராக விளங்கினார். வெறும் ஆராய்ச்சியுடன் நில்லாமல் அந்த அறிவின் பயனை நாட்டின தொழில் அபிவிருத்திசெய்வதிலும் ஈடுபடுத்தி உழைத்தார்.

இம்மகா அறிஞர் எளிய வாழ்க்கையை நடத்துவதிலேயே இன்பங்கண்டார். ஏழைகள் பணியில் ஈடுபட்டார். கதர், சுதேசி இயக்கத்தில் மிகவும் பற்றுக்கொண்டு உழைத்தார். பிரமசாரியாகவே சாகும் வரையிற் காலத்தைக் கழித்துவிட்டார்.

ஆச்சாரியா பிரபுல்ல சந்திர ரே 1861ம் வருஷம் ஆகஸ்டுமாதம் 2ந் திகதி ஜெஸ்ஸார் டிஸ்திறிக்கிலுள்ள ராருலி என்ற கிராமத்தில் பிறந்தார். சிறிதுகாலம் கல்கத்தா மாநிலக் கலாசாலையிற் படித்தபிறகு அவர் எடின்பரோ சர்வகலாசாலையில் சேர்ந்து வாசித்தார். 1886-ம் ஆண்டில் பி. எஸ் ஸி பட்டம் பெற்றார். அடுத்தவருடம் 'ஹோப்பரிசு' கிடைத்தது. மறுவருஷம் இந்தியா வந்து சேர்ந்ததும், கல்கத்தா மாநிலக் கலாசாலையில் இரசாயன சாஸ்திர போதகாசிரியராக நியமிக்கப்பட்டார். 1916ம் வருஷம் வரையில் அப்பதவியில் இருந்தார். பிறகு அவர் சர்வகலாசாலை விஞ்ஞானக் கலாசாலையின் புரொபஸராக நியமிக்கப்பட்டார். 1905ல் கல்கத்தாச் சர்வகலாசாலை அவருக்கு பி. எச். டி. பட்டத்தை அளித்தது. 1912ல் அவருக்கு டர்ஹாம் சர்வகலாசாலையால் டி. எஸ் ஸி பட்டமும் கிடைத்தது. பிரிட்டிஷ் சாம்ராஜ்ய சர்வகலாசாலைகள் காங்கிரஸில் அவர் பலமுறை கல்கத்தாச் சர்வகலாசாலையின் பிரதிநிதியாக இருந்திருக்கிறார். லண்டன் கெமிக்கல் சொஸைட்டியில் அவர் ஓர் அங்கத்தினர். வங்க 'ஏஸியாடிக் சொஸைட்டி'யிலும் அங்கத்தினராக விருந்தார். தேசீயக் கல்வி ஸ்தாபன ஆகிய 'கெமிக்கல் சொஸைட்டி'யின் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்.

'இந்து இரசாயன சாஸ்திரம்' (இரண்டு பாகங்கள்) வங்க இரசாயன சாஸ்திரியின் சரிதமும் அனுபவமும் என்ற நூல்கள் அவர் எழுதியவை. இரசாயனத் துறையில் விசேஷ ஆராய்ச்சிகளை யெல்லாம் அவர் நடத்தியிருக்கிறார். 'பெங்கால் கெமிக்கல் அண்ட் பார்மஸியூடிகல் வோர்க்ஸ்' என்ற ஸ்தாபனம் 1892ல் அவரால் ஆரம்பிக்கப்பட்டதாகும்.

ஆச்சார்ய ரே பழுத்த தேசபக்தர்; சீர்திருத்தவாதி; கதர் பக்தர்; 1917ல் நடந்த இந்திய தேசீய சமூக காங்கிரஸில் அவர் அக்ராசனம் வகித்திருக்கிறார். 1919ல் அவருக்கு 'சேர்' பட்டமும், 1942ல் ஸி. ஐ. இ. பட்டமும் அளிக்கப்பட்டன.

---

## உலகம்பலவிதக்கதை

2ம் பக்கத் தொடர்ச்சி

ஊறுகளும் நோவும் விரைவிலே மாறிவிட்டன. ஒருவாரஞ் சென்றவுடன் இந்த மூவரும் பழையபடி குடிக்கவும் தீமைசெய்து கொண்டு தெருவழியே திரியவும் தலைப்பட்டனர்; விசுவநாதன் தன்தாய், மாமன் மாமி விசாலாட்சி யென்னு மிவர்களை அறவே மறந்தான்; இடையிடையே தாயிடம் போய் ஏதும் வாங்கி உண்பான்; மற்றைவேளைகளில் தன் கூட்டாளிகளுடன் கடைகளிலும் விடுதிகளிலும்போய் உணவருந்துவான்; சூதாடுபவனும் குடியனும் உணவை அதிகமாகப் பொருட்படுத்துவதில்லை யென்று சொல்வார்கள். பாலசிங்கன் குடிகாரனாயிருந்தாலும் தான் நினைத்த காரியத்தைச் செய்து முடிக்க வேண்டுமென்ற நோக்கத்தை எந்த நேரமுங் கொண்டவன்; விசுவநாதன் தன் வீட்டிற்குத் தாயிடம் கிரமமாகப் போகாமையையும், தன் மாமனை, மாமியை, மைத்துனியைப்பற்றி நினையாமலும் பேசாமலும் இருப்பதையும் பாலசிங்கன் அவதானித்து வந்தான்; மித்திர பேதஞ் செய்வதற்கு இதுவே வாய்த்த சமயமென்று தன்னளவில் அவன் நிச்சயித்துக்கொண்டான்.

**"இந்தப்பெண்ணைக் கண்டவன் எருமைமேய்க்கப் போவனோ"**

ஒருதினம் மாலைநேரத்தில் மூவருமபோய்க் கடற்கரையில் வெறியோடு கூடியவர்களாய் வீண்கதைகள் பேசிக்கொண்டிருக்கும்போது பாலசிங்கன் வீராசாமியைப் பார்த்து "சிநேகிதா, இந்த விசுவநாதனுடைய கூட்டுறவு இன்னுஞ் சில நாளைக்குத்தான்" எனலும் வீராசாமி "ஏன் அப்படிச் சொல்லுகிறாய், இவன் நல்லவன் ஒருபோதும் எங்களை விட்டுப் பிரியமாட்டானென்றுதான் நான் நம்பியிருக்கிறேன்" எனப் பாலசிங்கனையும் விசுவநாதனையும் மாறி மாறிப் பார்த்தபடி சொன்னான்; "வேறொன்றுமல்ல, இவன் தன் மைத்துனியைக் கலியாணஞ்செய்யப் போகிறான்; கல்யாணஞ் செய்தானோ, பின்னர் இவனை எங்கள் கண்ணிலுங் காண முடியாது" என்றான் பாலசிங்கன்; "அதற்காக, அவனை நீ கல்யாணஞ் செய்ய வேண்டாமென்று சொல்லுகிறாய்? கல்யாணஞ் செய்தல் வேறு, எங்களுடைய சிநேகிதம் வேறு" என்றான் வீராசாமி; "அப்படி நினைத்து நடக்கக்கூடியவர்கள் நீயும் நானுந்தான்; இவன் அப்படியானவனல்லன்; இந்தப் பெண்ணைக் கண்டவர் எருமை மேய்க்கப் போவரோ என்ற நிலையிலுள்ளவன்; இவனை நம்புவதெல்லாம்…" என்றான் பாலசிங்கன். வீராசாமி, இவனுடைய வீண் பேச்சைக் கேளாதே; நான் கல்யாணம் முடித்தாலும் உங்களை ஒருபோதும் மறக்க மாட்டேன்" என்றான் விசுவநாதன்; "சரி, இப்பொழுது ஏன் வீண்கதை, அப்பொழுது எல்லாம் பார்த்துக் கொள்ளுவோம்" என்றான் பாலசிங்கன். இப்படிச் சில நேரம் இருந்து பேசிவிட்டு மூவரும் இருக்கைவிட்டெழுந்து கடற்கரையோரமாகவே போவாராயினர். போகும்போது, சற்றுத் தூரத்தில் கடற்கரையிற்றானே, பள்ளிக்கூடப் பிள்ளைகளாகிய மூன்று கன்னிகைகளும் அவர்களுக்குத் துணையாக ஒரு மனுஷியும் இருப்பக் கண்டார்கள்; அவர்கள் இருக்குமிடத்திற்குப் பத்து முழம் அப்பால் இந்த மூவரும் போய் இருந்துகொண்டு அவர்களை உற்றுப் பார்த்தார்கள்; ஆனால் அவர்கள் இவர்களைக் கண்டுங் காணாதுபோல் இருப்ப, இவர்களுள் பாலசிங்கன் "உன்னுசை நான மறப்பேனோ, மறந்தால் உயிர்தரிப்பேனோ" என்று பாட, வீராசாமி தன் கைகளால் தாளம்போட, விசுவநாதன் "பேஷ்" என்று சொல்லித் தலையசைத்தான்; அந்தப் பெண்பிள்ளைகளோடு இருந்த மனுஷி அவர்கள் செயலில் வெறுப்புக்கொண்டு "ஏன்? தம்பிமாரே, உந்தப்பெரிய கடற்கரையில் உந்த ஆட்டமல்லாமல் உங்களுக்கு இருக்க வேறு இடமில்லையா" என்று சற்றுப் பெலத்துச் சொல்ல, பாலசிங்கன் "கடற்கரை எல்லாருக்கும் பொதுதான்" என்றான்; அவன் சொன்ன பதில்மொழி காதிற்பட்டவுடன் அந்த மனுஷி தன்னுடன் இருக்கும் கன்னியர் மூவரையும் பார்த்து "தங்கைச்சிமாரே, வாருங்கள் வீட்டிற்குப் போவோம்; இல்லாவிட்டால் வேறு இடத்திற்குப் போயிருப்போம்" எனலும், அந்த மூன்று கன்னியருள் மீனு என்னும் பெண் அம்மனுஷியைப் பார்த்து "ஆயா, உந்தக் குடிகாரருக்குப் பயந்து நாங்கள் போகமுடியாது; இப்படியே இருப்போம் இவர்களால் ஏதுஞ் செய்ய முடியுமானால் செய்யட்டும் பார்ப்போம்" என்று சிறிது சீற்றத்தோடு உரக்கச் சொன்னாள். (வரும்)

---

# விவாக விஞ்ஞாபனம்.

*

### இராஜசூரியர்—அன்னலக்ஷுமி

சிறைச்சாலைச் சுப்பிறிண்டெண்டாகக் கடமையாற்றி, இப்போது இளைப்பாறியிருக்கும் முதலியார் S. செல்லப்பா அவர்களின் புதல்வராகிய **திருவளர் செல்வன். இராஜசூரியர்** அவர்களுக்கும், யாழ்ப்பாணம் 'ரவுண் ஓவசியர்' திரு. A. தில்லையம்பலமவர்களின் புதல்வி திருவளர் **செல்வி. அன்னலக்ஷுமிக்கும்** நிகழும் 1944-ம் ஆண்டு யூலைமாசம் 1ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கும் 2 மணிக்குமிடையேயுள்ள சுபமுகூர்த்தத்தில், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சங்கரத்தையிலுள்ள மணமகளில்லமாகிய "தில்லை வாச"த்தில் விவாகம் நடைபெறும். மணமகனில்லமாகிய வண்மேற்கு ஐயனார் கோவிலடியிலுள்ள "மங்களபதி"யில் அடுத்த நாள் மாலை 6 மணிக்கும் 8 மணிக்குமிடையிற் கொண்டாட்டம் நடைபெறும். இருபக்கத்தாரின் நண்பர்களும் சுற்றத்தவர்களும் சமுகமளிக்குமாறு வேண்டிக்கொள்ளப் படுகின்றனர்.

பிரத்தியேகமான அழைப்புப் பத்திரங்கள் இல்லை.

(Mis 56 26 & 29-6-44)

---

### அதிக லாபத்துக்கு வெள்ளைப்பூடு விற்றவருக்கு ரூ. 500 அபராதம்

டெபுவனு வாசியாகிய டி. ஏ. பீட்டர் சிங்கோ என்ற வியாபாரி காலி ரூத்தில் வெள்ளைப்பூட்டிக்கு கட்டுப்பாட்டுவிலை $8\frac{1}{2}$ சதமாகவிருக்க ரூ 1-75 க்கு விற்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டார். நீதிபதி திரு. வி. சிவசுப்பிரமணியம் எதிரிக்கு ரூபா 500 அபராதம் விதித்தார்.

---

## காந்திஜி—அரசாங்கக் கடிதப் போக்குவரத்து

### முழுவிபரமும் புத்தக ரூபத்தில் அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது

### பிரசுரத்தைக் காந்திஜி வரவேற்கிறார்

புதுடில்லி யூன் 21—

காந்திஜிக்கும் வைஸ்ராய் உள்நாட்டிலாகாக் காரியதரிசி டாட்டன்ஹாம் ஆகியவர்களுக்குமிடையே நடந்த கடிதப்போக்குவரத்துகளின் முழு விபரத்தை இன்று அரசாங்கத்தார் புஸ்தகரூபத்தில் பிரசுரித்திருக்கின்றனர். இதில் டாட்டன்ஹாம் குற்றச்சாட்டுகளுக்குக் காந்திஜி அளித்த பதிலும் அடங்கியிருக்கிறது.

மகாத்மா அரசாங்கத்துக்கு எழுதியிருக்கும் கடிதங்களில் "ஆகஸ்ட் கலவரங்களுக்குக் காங்கிரஸ் பொறுப்பல்ல. அரசாங்கந்தான் பொறுப்பாளி அரசாங்கந்தான் யுத்த முயற்சிக்குப் பங்கம் விளைவித்தது. ஆகையால், என்மீதும் காங்கிரஸ் மீதும் உள்ள குற்றச்சாட்டுகளை ஒன்று வாபஸ் வாங்கவேண்டும்; இல்லையேல் பாரபட்சமற்ற நீதிசபை முன்பு விசாரணை நடத்த வேண்டும்" என்று ஆணித்தரமாக எழுதியிருக்கிறார்.

**725 பக்கங்களைக் கொண்ட பிரசுரம்**

1942ம் வருட ஆகஸ்ட்மாதக் கலவரங்களுக்குக் 'காங்கிரஸ்தான் பொறுப்பாளி' என்னும் தலைப்புடன் அரசாங்கத்தார் வெளியிட்டிருந்த சிறு நூலுக்கு 78 பக்கங்கொண்டதாகக் காந்தி ஒரு பதில் எழுதியிருந்தார். இவையனைத்துஞ் சேர்ந்ததாகக் "காந்தியுடன் கடிதப் போக்குவரத்து" என்னும் தலைப்பில் நெருக்கமாக அச்சடிக்கப்பட்ட 725 பக்கங்கொண்ட புத்தகமொன்றை இன்று அரசாங்கம் வெளியிட்டிருக்கின்றது. இந்நூலில் காந்திஜிக்கும் லின்லித்கோ பிரபு, வேவல் பிரபு சாமுவேல் பிரபு உள்நாட்டிலாகா ஆகியவர்களுக்குமிடையே 1942 ஆகஸ்ட்மாத முதல் 1945 ஏப்ரில் வரையில் நடந்த கடிதப்போக்குவரத்து அடங்கியிருக்கிறது.

**அரசாங்கப் பிரசுரத்தைக் காந்திஜி வரவேற்கிறார்**

பூனா யூன் 21—

பரோடா சமஸ்தான மகாராணி சிம்னுபாய் மற்றும் துவாரகா குடும்பத்தைச் சேர்ந்த இருவர் ஆகியோர் இன்று மாலை மகாத்மாவைத் தரிசித்தனர். காலையிலும் பிற்பகலிலும் சரோஜினி தேவியும் விஜயலட்சுமி பண்டிட் ஆகிய இருவரும் நீண்டநேரம் மகாத்மாவுடன் கூடவே இருந்தனர்.

மகாத்மா இன்று அதிக அலுவல்களைக் கவனித்தார். மேலும் கடிதப்போக்குவரத்தைக் கவனிப்பதிலும் வாசிப்பதிலுமே நீண்ட நேரத்தைக் கழித்தார். மகாராஷ்டிர காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான வி. பி. மாயே எனபவரும் இன்று மாலை மகாத்மாவைப் பேட்டிகண்டார். மகாராஷ்டிரத்தின் அரசியல் நிலைமையைப்பற்றி விவாதிப்பதற்கு ஆம் மாதம் 29ந் தேதியன்று ஐந்து மகாராட்டிர காங்கிரஸ் பிரதிநிதிகளைச் சந்திக்கக் காந்திஜி ஒப்புக்கொண்டுவிட்டாரென்று தெரிகிறது.

காந்திஜிக்கும் அரசாங்கத்துக்குமிடையே நடந்த கடிதப்போக்குவரத்தையும் ஆகஸ்ட் கலவரத்துக்கு காங்கிரஸ்தான் பொறுப்பாளி

தொடர்ச்சி 6-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காந்திஜி-அரசாங்கக் கடிதப் போக்குவரத்து

5-ம் பக்கத் தொடர்ச்சி

என்ற தலைப்பில் வெளியிடப்பட்டடான்ஹாம பிரசுரத்திற்குக் காந்திஜி அளித்த பதிலையும் அரசாங்கம் வெளியிட்டிருப்பது காந்திஜியால் வரவேற்கப்படுகிறதென்று மகாத்மாவைப் பேட்டிகண்ட ஒருவர் கூறினர். இந்தப் பிரசுரத்தின் மூலம் இப்பொழுதைய அரசியல் நிலைமைபற்றிக் காந்திஜியின் அபிப்பிராயம் என்ன? என்பதைப்பற்றி அரசாங்கத்தின் குற்றச்சாட்டுகளுக்கு அவர் அளித்துள்ள பதிலையும் தெரிந்துகொள்வதற்குப் பொதுமக்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறது. மகாத்மாதான் விடுதலையானவுடனே தனக்கும் அரசாங்கத்துக்கு மிடையே நடந்த கடிதப் போக்குவரத்து முழுவதையும் பிரசுரிக்கவேண்டுமென்று விரும்பினர். ஆனால், பத்திரிகைக்கட்டுப்பாட்டு விதிகள் இதற்கு இடம் கொடுக்குமா? என்ற பிரச்னையால் அந்த யோசனை கைவிடப்பட்டது.

டாக்டர் ஜீவராஜ் மேத்தாவும் இன்று மகாத்மாவைச் சந்தித்தார்.

பஞ்சகானி செல்லமாட்டார்

மகாத்மா யூலைமாதம் முதல்வாரம் வரை புனாவிலே தங்குவார்; பம்பாய் டாக்டர்கள் ஆலோசனைக் கணக் பஞ்சகானி செல்லவாரென்று எதிர்பார்க்கப்பட்டது. புனா சீதோஷ்ணஸ்திதி அவரது தேகநிலைக்கு உகந்ததாக இருப்பதால் புனாவிலிருந்து பஞ்சகானிக்குச் செல்லும் திட்டத்தைக் கைவிடலாமென்று காந்திஜி நினைக்கிறார்.

### 15 வருடத் திட்டம் பற்றியும் விவாதம்

அரசியல் பொருளாதார நிலைமைபற்றி விவாதித்தார். பம்பாய் தொழிற் பிரமுகர்கள் வகுத்துள்ள 15 வருடத் திட்டம்பற்றியும் விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இந்தியாவின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கான திட்டமொன்றை ஆகர்லால் என்பவர் தயாரித்துக் கொண்டிருக்கிறாராம்.

## மலையாளத்தில் யாழ்ப்பாணப் புகையிலைக்குக் 'கிராக்கி'

### சமீபகாலங்களில் மிக அதிகரித்திருக்கிறதாம்

சென்ற நிதி வருடத்தில் யாழ்ப்பாணம் மலையாளம்புகையிலைக் கூட்டுறவுச் சங்கத்தால் 10லட்சம் ரூபா பெறுமதியான இலங்கைப் புகையிலை திருவாங்கூரில் விற்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவுச் சங்கப் பதிவு காரியஸ்தர் திரு. ஜே. டி. சொய்ஸாவும் உதவிப் பதிவு காரியஸ்தர் திரு. இராகுநாதனும் திருவாங்கூரில் குறித்த வியாபாரங்களைப் பரிசீலனைசெய்துவிட்டு இப்போது திரும்பியிருக்கின்றனர்.

சங்கத்தின் தலைவர் திரு. டி. வி. ராஜரத்தினமும் காரியதரிசி திரு. சே. நடராஜாவும் அவர்களோடு சென்றனர்.

திருவாங்கூரில் இப்போது யாழ்ப்பாணப் புகையிலைக்கு மிகுந்த கிராக்கி இருப்பதாகவும் ஒன்றரை நூற்றாண்டுகளாக யாழ்ப்பாணத்துக்கும் திருவாங்கூருக்கு மிடையிலிருந்து வந்த கடனிமுறை மாறிச் சென்ற 18 மாதங்களாக ரொக்க முறை அனுஷ்டிக்கப்பட்டு வருவதாகவும் இது எதிர்பார்த்ததைவிட அதிக வெற்றியளித்திருப்பதாகவும் திரு. டி. சொய்ஸா தெரிவித்தார்.

திரு. டி. சொய்ஸா அங்குச்சென்றதன் மற்றொரு காரணம் யாழ்ப்பாணப் புகையிலையின் கட்டுப்பாட்டில்லை நிர்ணயிப்பதேயாகும். அங்குள்ள சில சில்லறை வியாபாரிகள் அமோகமான இலாபத்துக்குப் புகையிலை விற்று வருவதனால், மதுராபுரி பாலனக் கமிஷனர் விலைக்கட்டுப்பாட்டுத் திட்டமொன்றை ஆரம்பிக்க எண்ணியிருக்கிறார்.

திரு. சொய்ஸா இலங்கையிலுள்ள சங்கத்தைக் கலந்தாலோசித்தபின், தமக்கு நியாயமென்று விளங்கிய சில ஆக்க... பரிபாலனக்... வித்திருக்கிறார்.

## சேக்கிழார்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

என்னும் அருமைப் பாடல்களைக் காண்க.

இவ்வரும்பெரும் நூலில் அமைந்துள்ள ஐந்திணை வளங்களின் அழகும், ஏனைய சொற்சுவை பொருட்சுவைகளையும் சுருக்கிய கட்டுரையில் எடுத்துக்கூற முடியாது இவை தனித்தனியே எழுதுவதற்கும் பேசுவதற்கும் உரியன.

திருஞான சம்பந்தர், அப்பர், நம்பியாரூர் ஆகிய இவர்கள் தலயாத்திரைகளைப்பற்றிக் கூறியவிடங்களில் அவரவர் சென்றவழி, மீண்டவழிகள், வழிகளிலே உள்ளவூர்கள், அவற்றின் இயல்புகள், காலநிலைகள் முதலியவற்றைப் பற்றித் தெள்ளிதின் விளங்குவதால் அவ்வவ்விடங்களுக்கு இவ்வாசிரியர் நேரே சென்று ஊன்றிப் பார்த்து அறிந்தே கூறியிருக்கின்றார் என்றும் கூறலாம். முடியுடை மன்னனுக்கு முதல் அமைச்சராய் இருந்ததால் இவ்வசதிகள் வாய்த்திருந்திருக்கும்.

மூவர் முதலிகள் இவ்விவ் வூர்களில் இவ்விச் சமயங்களில் இந்த இந்தப் பாடல்களைப் பாடினார்கள் என அவ்வப்பாடல்களின் முதல் நினைப்பையும் தலங்களையும் கூறுவதாலும், காரைக்காலம்மையார் பட்டினத்தடிகள் முதலிய நாயன்மார்களின் பாடல்களில் செல்லும் பொருளும் அங்கங்கே இவர் நூலில் மிளிர்வதாலும், தமது நூலுக்கு முந்திய பதினொரு முறைகளிலும் நன்கு பயின்றுள்ளார் என்பது புலனாம்.

இந்நூலை அன்போடு ஊன்றிப் பயில்வோர் சிவபதச் செல்வராக இறைவனருளை எய்துவார் என்பது இந்நூல் தோன்றிய நாள்தொட்டு இன்றுவரை பலரும் அனுபவத்தில் அறிந்த உண்மை.

இவ்வரும்பெரும் நூலைப் பல்லாலும் கற்றுப் பயிலுவதும் இதனை ஆக்கிய தெய்வப்பாவலராகிய சேக்கிழார் திருவடிகளைச் சிந்தனை செய்வதும் தமிழர், சைவர் என்பார் ஒவ்வொருக்கும் கடமையாம்.

சேக்கிழார் திருவடி வாழ்க

—ஞானசம்பந்தம்

## வங்கப் பஞ்சக் கொடுமை

### விபரம் அறிந்து காந்திஜி கொதிப்பு

ஆமதாபாத் யூன் 22

வங்காளத்தில சம்பத்திலதோன்றிய பஞ்சத்தில் 50 லட்சம் மக்கள் மாண்டனர் என்று கூறி அங்கு தலைவிரித்தாடிய பரிதாபகரமான விவரங்களை நேரிற் பார்த்தறிந்த ஓர் ஆந்திர நாட்டுத் தொண்டர் காந்திஜியிடம் விவரித்தார். வங்கக் கஷ்டத்தைக் கேட்டு மனம் தாங்க மாட்டாமல், "போதும் நிறுத்துங்கள். இன்னும் அதிகமாக எதையும் சொல்லாதீர்கள். என் மனம் சொதக்கிறது" என்று தெரிவித்தார்.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத்தட்டு)

### வெள்ளி யூன் 30

காலை 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 வானொலி வாத்ய கோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 ஜயலக்ஷ்மி ராஜகோபாலன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஜயலக்ஷ்மி ராஜகோபாலன் பாட்டு 2 தமிழில செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை 5 டி கே ராமசாமி பாட்டு 5-40 குரான்-ஷரீப் விளக்கம் 6 துருப்புக் கோட்டை 6-30 ஆங்கிலத்தில செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இலக்கிய வாசகம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில செய்திகள் 7-45 நிலாச் சாப்பாடு 8 அருப்புக்கோட்டை எஸ். கணேசபிள்ளை நாகஸ்வரம் 8 45 டி கே ராமஸ்வாமி பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ஐரோப்பிய சங்கீதம் 10 இசைவேளை 10-30 முடிவு.

### சனி யூலை 1

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 வீணைதனம் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 திரைகானம் 9 முடிவு.

1 கே வி ராமஸ்வாமி ஐயர் வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கதம்பம் † 2 தமிழில் செய்திகள் 2-05 நந்துலா ஸ்ரீ ராமமூர்த்தி பாட்டு 2-30 முடிவு.

மாலை 5 நந்துலா ஸ்ரீ ராமமூர்த்தி பாட்டு 5-40 ஜீவசாக்ஷிமாலை விளக்கம் 5 கே பி ராமஸ்வாமி ஐயர் வயலின் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 முன்னேற்றம் ஒலிச்சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில செய்திகள் 7-45 மதராஸில் உள்ளபடி 9-15 ஷாஸ்திர † 9-20 ஆங்கிலத்தில செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ராகமாலிகை பல்லவி 10 இசைவேளை 10-30 முடிவு.

### ஞாயிறு ஜூலை 2

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 நடனகீதம் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 இசைக் கதம்பம் 9 முடிவு.

12 கதம்பம் † 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி என் கனகாபாய் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கதம்பம் † 2-30 முடிவு

மாலை 5 டி என் கனகாபாய பாட்டு 5-40 தேவாரத்தை 6 இசைவகை † 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள 7-15 நமது தபால் பெட்டி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 நாடகத் தமிழ் 8 எம் எ கல்யாண கிருஷ்ண பாகவதர் வீணை 9 சர்வகலாசாலைகளுக்கு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 நந்தி இசை 10 இசைவேளை † 10-30 முடிவு.

### திங்கள் யூலை 3

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திரைகானம் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 என் கே பி அருணசலம் நாகஸ்வரம் 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கதம்பம் † 2 தமிழில செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 என் கே பி அருணசலம் நாகஸ்வரம் 5-45 இசைப்பயிற்சி 6 சாவித்திரி கணேசன் பாட்டு 6-30 ஆங்கிலத்தில செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 வானொலி வாத்ய கோஷ்டி 8 மன்னார்குடி ராஜகோபாலபிள்ளை பாட்டு கும்பகோணம் டி என் சம்பந்தபிள்ளை வயலின் உமையாள்புரம் என் கணேசயர் மிருதங்கம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 நாட்டிய கீதம் 10-05 டில்லியிலுள்ளபடி 10-30 முடிவு.


## அடைவு நகை விற்பனவு

வட்டுக்கோட்டை கிழக்கு ஆறுமுகம் செல்லம்மாவுடைய அடைவு கடையில் 1939-ம் ஆண்டு ஆவணி மாசம் துவக்கம் தவணைதப்பி இருக்கும் நகைகளில் அடைவுமீண்டநகைகள் நீக்கி 1944-ம் ஆ ஆடி மீ" 22-உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் ஏல விற்பனையில் விற்கப்படும்.

இ. சற்குரு,
கொம்மிஷனர்,
20—6—44

Mis 58 29.6.44—3.7.44

## நன்றி கூறுகின்றனர்

திரு. K. கனகரத்தினமவர்களும் பாரியாரும் திரு R. நமசிவாயமவர்களும் பாரியாரும் பின்னையோரின் விவாகத்திற்குச் சமுகமளித்த நண்பர்களுக்கும் சுற்றத்தவர்களுக்கும் விவாகவெகுமதிகளனுப்பினோர்க்கும் பாராட்டுச் செய்திகளனுப்பினோர்க்கும் தமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

5, டீ, பொன்சேகாறேட்,
பம்பலப்பிட்டி, 26-6-44.

Mis 57—29.6.44

## தேவை

காலி, கழுவலே, மீனாட்சி சுந்தரேஸ்வரர்கோயிலுக்கு ஒரு கணக்கப்பிள்ளை தேவை.

சிவபக்தியும், ஆசாரசீலமும், தமிழறிவும், கணக்கில் அநுபவமும் இருத்தல் வேண்டும்.

வேதனம் தராதலத்தின்படி ரூபாய் 40 முதல் 60 வரையும், இலவச விடுதியும் உதவப்படும்.

விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு இம்மாதம் 30ந் தேதிக்குமுன் நேரிலாவது தபால் மூலமாயாவது நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பஞ் செய்க.

எம். எஸ். சின்னத்துரை,
(Trustee) P. W. D. Galle.

Mis 55 22 & 26 & 29-6-44


## அறிவித்தல்

### யாழ்ப்பாண டிஸ்திறிக் பகுதியில் உப உணவுப்பொருட்கள் கொடுத்தல்

1944-ம் ஆ யூலாய் மீ" 3-ந் திகதி திங்கட்கிழமை முதல் யூலாய் 9ந் திகதி வரைக்கும் ஐக்கிய சங்கக் கடைகளல்லாத மற்றைய சில்லறை வியாபாரிகள் மூலம் அச்சில்லறை வியாபாரிகளிடம் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கூப்பன்காரருக்கும் பின்வரும் உப உணவுப் பொருள்களை விற்கும்படி அரசாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

1 கடலைப்பருப்பு அரைஅவுன்ஸ்
2 காய்ந்த பயறு அரை அவுன்ஸ்
3 புளி கால் அவுன்ஸ்

(2) தங்களுக்குச் சேரவேண்டிய உப உணவுப்பொருட்களைக் கட்டுப்பாட்டு உணவுப்பொருட்களுடன் பெற்றுக் கொள்ளலாமென இத்தாலறிவிக்கப்படுகின்றது.

E. B. இசவீரசிங்கம்,
வடமாகாண ஏஜண்டருக்காக.

யாழ்ப்பாணம் கச்சேரி
27—6—44.

G 40 29—6—44

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors—the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, 29, June, 1944

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org